அரசாங்கம் கண்டிப்பாக அங்கன்வாடி மையங்களுக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுத்து, நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக, மிக விரைவில் அங்கன்வாடி மையங்கள் தன்னிறைவு அடைகின்ற வகையிலே அம்மாவின் அரசு செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

156—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***8388—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, லால்குடி, பூவாளூர் மற்றும் புள்ளம்பாடி ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில், திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதியைச் சேர்ந்த லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி ஆகிய 3 இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, மொத்தம் 1,001 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன என்பதை நானும் நன்கு அறிவேன். நான்22-6-2016 அன்று எழுதிய வினாவில் லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி ஆகிய பகுதிகளில் ஆண்டு முழுவதும் இயங்கக்கூடிய நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று எழுதியிருந்தேன். அதைத் திருத்தம் செய்து எனக்கு அந்தத் துறையிலிருந்து கடிதம் வந்தது. 3-8-2016 அன்று மீண்டும் நான் எழுதிய வினாவை புதியதாக எழுதிக் கொடுக்கச் சொன்னார்கள். மீண்டும் எழுதிக் கொடுத்தேன். மீண்டும் அதேபோன்று நேரடி நெல் கொள்முதல் நிலையம் உள்ளது என்று பதில் வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி ஆகிய பகுதிகளில் ஆண்டு முழுவதும் இயங்கக்கூடிய நிலையான நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி ஆகிய பகுதிகளுக்கு ஆண்டு முழுவதும் இயங்கக்கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டும்; அது நிரந்தரமாக இயக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர் கோரிக்கை வைத்த 3 ஆண்டுகளிலுமே அந்தப் பகுதியில் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், குறைந்த அளவிலேதான் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் தமிழகத்தில் 1,447 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அதிலே 11 இலட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நேரடியாக ECS மூலம் பணப் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் 3 இலட்சத்து 9 ஆயிரத்து 319 விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

[2018 ஜூன் 8

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையில், விவசாயிகளுக்கு இந்த ஆண்டு மட்டும் 79 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டிருக்கின்றது. 7 ஆண்டுகளில் 569 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கிய அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆண்டு 10,033 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நிரந்தரமாக திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நிரந்தரமாக அமைக்க 40 சென்ட் நிலம் வேண்டும். அது புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி அல்லது விவசாயிகள் தானமாக நிலத்தைக் கொடுத்தாலும் சரி, உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, நேரடி நெல் கொள்முதல் நிலையம் நிரந்தரமாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி, பூவாளூர் பேரூராட்சியில் 5 வருவாய்க் கிராமங்களிலும், லால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 41 ஊராட்சிகளில் 45 வருவாய்க் கிராமங்களிலும், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில், திண்ணக்குளம், விரகலூர், ஆலம்பாடி ஆகிய ஊராட்சிகளிலும் ஆண்டொன்றுக்கு, இரு பருவங்களிலும் 24,000 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதில் அரசு 11,000 மெட்ரிக் டன் நெல்லைத்தான் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்கிறது. மீதமுள்ள நெற்களை விவசாயிகள் விற்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.

2018 ஜூன் 8]

திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் ஆண்டு முழுவதும் இயங்கக்கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் இருப்பதைப் போன்று, லால்குடி, பூவாளுர், புள்ளம்பாடி போன்ற ஊர்களில், ஏதாவது ஓர் இடத்தில் ஆண்டு முழுவதும் இயங்கக்கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 1,447 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் டெல்டா பகுதி மற்றும் டெல்டா அல்லாத பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்முதல் நிலையங்கள் ஆண்டு முழுவதும் இயங்கக்கூடியதல்ல. குறுவைப் பருவம், சம்பா பருவம், கோடை குறுவைப் பருவம் ஆகிய பருவங்களில்தான் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. அவ்வாறு திறக்கப்பட்டு, பருவம் முடிந்த பிறகு அந்த நிலையங்கள் மூடப்படுகின்றன. மீண்டும் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று, அந்தப் பகுதிகளில் நெல் வரத்து இருக்குமேயானால், உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பகுதியில் ஆண்டு முழுவதும் நெல் வரத்து இருக்குமென்று சொன்னால், லால்குடி பகுதியில், ஆண்டு முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறப்பதற்கு, ஆய்வு செய்து, அதன் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்றத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியத்திற்குட்பட்ட, சிவசைலம் ஊராட்சிக்குட்பட்ட 7 கிராமங்கள், பெத்தான்பிள்ளை குடியிருப்பு, பங்களா குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, சிவசைலம், கல்யாணிபுரம், கம்பன்குளம், அழகுபுரம் ஆகிய கிராமங்களில்*

கிட்டத்தட்ட 1,000 விவசாயிகள் உள்ளனர். அங்கு பல வருட காலமாக சிவசைலம் கிராமத்தில் ஒரு நெல் கொள்முதல் நிலையம் இருந்தது. என்ன காரணம் என்று தெரியவில்லை, இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய தொகுதிக்குட்பட்ட கருத்தபிள்ளையூருக்கு அந்த நெல் கொள்முதல் நிலையம் மாற்றப்பட்டுள்ளது. அங்கு 200 விவசாயிகள்தான் இருக்கின்றார்கள். கருத்தபிள்ளையூர் என்னுடைய தொகுதியாக இருப்பதால், அங்குள்ள நெல் கொள்முதல் நிலையம் அப்படியே இருக்கட்டும். மீண்டும் சிவசைலத்தில் நெல் கொள்முதல் நிலையம் ஒன்றினை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், அவர்கள் எல்லாம் சிறு, குறு விவசாயிகள் என்பதால், கருத்தபிள்ளையூருக்கு நெல்லை எடுத்துச் செல்ல இயலாது, பல பிரச்சினைகள் அவர்களுக்கு இருக்கின்றன. ஏன் அந்த கொள்முதல் நிலையம் மாற்றப்பட்டது என நான் அதற்குள்ளே செல்லத் தயாராக இல்லை. கருத்தபிள்ளையூரில் இருக்கின்ற நெல் கொள்முதல் நிலையம் அங்கேயே இருக்கட்டும். ஏற்கெனவே சிவசைலத்தில் இயங்கிக் கொண்டிருந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை தாங்கள் மீண்டும் நிறுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்றமுறைகூட காவூர், நெல்லையப்பபுரம், வாளைக்குளம் போன்ற இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் அவர்கள்தான் அமைத்துத் தர வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைத்துத் தர முடியாது. ஆகவே, தயவுசெய்து பகுதிநேரக் கடையை அமைத்துத் தரும்படி மிகவும் பணிவன்புடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சிவசைலம் பகுதியில், நெல் வரத்து இருக்குமேயாயின், உடனடியாக ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பகுதிநேரக் கடை பற்றிச் சொன்னார்கள். அதனையும் ஆய்வு*

2018 ஜூன் 8]

செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினமே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கேள்வியை கேட்கலாம் என்று கருதினேன். பொதுவாக, உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை மூலமாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படுவது, அப்பகுதிகளில் விளைவிக்கப்படும் நெல் முழுவதும் நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு வரும் என்ற எண்ணத்தில் அல்ல. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்தால், விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய ஆதார விலை சரியாகக் கிடைக்கவும், கொள்முதல் செய்யவரும் வியாபாரிகளும் விவசாயிகளுக்கு உரிய விலையைக் கொடுப்பார்கள் என்பதற்காகவும்தான். 22 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் துறைக்கு நான் அமைச்சராகப் பொறுப்பு வகித்தேன். நான் அமைச்சராக இருந்தபோது, எங்களுடைய முதலமைச்சர், எந்தெந்த இடங்களிலெல்லாம் நெல் வரத்து அதிகமாக இருக்கிறதோ, அங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்கினார்கள். அன்றைக்கு இருந்த நிலையைவிட, இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், நிலத்தடி நீர் எந்தப் பகுதிகளில் கிடைக்கின்றதோ அந்த இடங்களில் மட்டும்தான் நெல் உற்பத்தி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. சம்பா பாசனத்திற்கு மட்டும் நீர் ஒழுங்காகக் கிடைக்கிறது. குறுவை சாகுபடிக்கு நீர் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. குறிப்பாக, திருக்காட்டுப்பள்ளி பகுதியாக இருந்தாலும், பூதலூர் பகுதியாக இருந்தாலும், திருவையாறு பகுதியாக இருந்தாலும், நீடாமங்கலம் பகுதியாக இருந்தாலும், சாலியமங்கலம் பகுதியாக இருந்தாலும், அப்பகுதிகளில் முழுமையாக குறுவை சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எந்தெந்தப் பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைப்படுகின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் அமைத்துக்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான், விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய ஆதார விலை ஒழுங்காகக் கிடைக்கும். இல்லையென்றால், கொள்முதல் செய்யவரும் வியாபாரிகள் 100 ரூபாய், 200 ரூபாய் குறைவாகக் கொடுத்துதான் நெல்லை கொள்முதல் செய்வார்கள். விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில், தேவையான இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே துறையில் அமைச்சராகப் பொறுப்பு வகித்தவர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவுத் துறை அமைச்சராக இருந்த காரணத்தினால், சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்; சில ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம், எந்தெந்த இடங்களில் நெல் வரத்து அதிகமாக இருக்கிறதோ, எந்தெந்த இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வேண்டுமென்று விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெறுகிறதோ, மக்கள் பிரதிநிதிகள் எந்தெந்தப் பகுதிகளில் நேரடி கொள்முதல் நிலையங்கள் தேவை என்று கேட்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்கலாம் என்ற அதே உத்தரவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். எனவே, எந்தெந்த இடங்களில் நெல் வரத்து அதிகமாக இருக்கிறதோ அந்தந்த இடங்களில் உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*